பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

11 11 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லி செங்கோட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகே காரில் குண்டு வெடித்ததில் 8 பேர் உயிரிழந்தனர்.

*இந்த சம்பவம் குறித்து NSG மற்றும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. பிஹார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

3. ஆறுகளில் குப்பைகள் கலப்பதைத் தடுக்க கடுமையான சட்டம் இயற்றப்பட வேண்டியது அவசியம் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுரகன் வலியுறுத்தியுள்ளார்.

4. நெல்லை உள்ளிட்ட 3 தென் மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தில்லி செங்கோட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகே நேற்று மாலை காரில் குண்டு வெடித்ததில் நேரிட்ட தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

செங்கோட்டை அருகே நிறுத்தப்பட்டிருந்த கார் வெடித்ததில் அருகில் இருந்த கார்களும் தீக்கிரையாயின.

உடனடியாக சம்பவ இடத்திற்கு தீயணைப்புத்துறையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

காவல்துறையினருடன் தேசிய பாதுகாப்பு படையினரும், தேசிய புலனாய்வு அமைப்பினரும் சம்பவ இடத்திற்குச சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தையடுத்து தலைநகர் தில்லி மட்டுமல்லாது நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தில்லி சம்பவம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மற்றும் உயரதிகாரிகளுடன் நேற்றிரவு ஆலோசனை நடத்தினார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள பிரதமர், நிலைமை குறித்து நேரில் ஆய்வு செய்ய உள்துறை அமைச்சரை அறிவுறுத்தியிருப்பதாகவும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க அதிகாரிகள் அறிவுத்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் அதில் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இது மிகுந்த வேதனையளிப்பதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

கார் வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்து புதுதில்லி லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறுவதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அறிவுறுத்தலின்பேரில் நிலைமையை ஆய்வு செய்ததாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

உள்துறை அமைச்சக உயரதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடைபெற உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடைபெறுவதுடன் மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று திரு. அமித் ஷா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சம்பவ இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை குறித்து தில்லி காவல் ஆணையர் மற்றும் உயரதிகாரிகளிடம் உள்துறை அமைச்சர் கேட்டறிந்தார்.

கார் வெடிப்பு சம்பவம் நிகழ்ந்த சில நிமிடங்களில் தில்லி காவல்துறையினர், NSG, NIA அதிகாரிகளுடன் கைரேகை நிபுணர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணையை தொடங்கியிருப்பதாகவும், அருகில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகள் குறித்து ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

இதனிடையே தில்லி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும், செங்கோட்டை, அரசு அலுவலகங்கள், சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை விமான நிலையம், எழும்பூர், சென்ட்ரல் ரயில் நிலையம் உள்ளிட்ட மாநிலம் முழுவதும் உள்ள ரயில் நிலையங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சேலம் ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்புப் படையினர் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் தீவிர சோதனைக்குப் பின்னரே பயணிகளை அனுமதிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Vijayakumar - 32 Sec)

**<<<<>>>>**

தில்லியில் நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உள்ளிட்ட தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சமூக வலைதளத்தில் இரங்கல் தெரிவித்துள்ள குடியரசுத்தலைவர், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாக கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தங்கள் உறவினர்களை இழந்து வாடும் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

காயமடைந் சிகிச்சை பெறுபவர்கள் விரைந்து பூரண குணமடைய வேண்டும் என்றும் சமூக வலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தில்லி மக்கள் தேவையற்ற வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், அமைதியை கடைபிடிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், செங்கோட்டை அருகே நிகழ்ந்த சம்பவம் மிகுந்த வேதனையளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாகவும், காயமடைந்து சிசிச்சை பெறுபவர்கள் விரைந்து குணமடைய வேண்டும் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் இன்று நடைபெறுகிறது.

20 மாவட்டங்களில் அடங்கிய 122 தொகுதிகளில் சுமார் 3 கோடியே 70 லட்சம் வாக்காளர்கள் இன்று வாக்களிக்க உள்ளனர்.

இன்றைய தேர்தலில் 136 பெண்கள் உட்பட ஆயிரத்து 302 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

வாக்குப்பதிவு இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ளது.

மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

நேபாளை எல்லையை ஒட்டியுள்ள பகுதி மற்றும் உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம், ஜார்கண்ட் மாநில எல்லையில் அமைந்துள்ள 7 தொகுதிகளில் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாலை 5 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிஹார் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இம்மாநிலத்தில் முதற்கட்ட தேர்தல் கடந்த 6ஆம் தேதி நடைபெற்றது.

அதில் 65 சதவீத வாக்குகள் பதிவாகின.

இன்றைய தேர்தலிலும் பதிவாகும் வாக்குகள் வரும் 14ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

<<<<>>>>

முல்லைப் பெரியாறு பலமாக உள்ளது என வல்லுநர்கள் பலரும் ஏற்கனவே தெரிவித்துள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அணையின் பாதுகாப்பை ஏற்கனவே பலமுறை அதிகாரிகள் ஆய்வு செய்து அதன் உறுதித்தன்மையை எடுத்துக் கூறியுள்ளதாக தெரிவித்தார்.

பாலாறு உள்ளிட்ட ஆறுகளில் குப்பைகள் மற்றும் கழிவுகள் கலப்பதைத் தடுக்க கடுமையான சட்டம் இயற்றப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. துரைமுரகன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய 3 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட உள் தமிழகம் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக இன்று முதல் வரும் 16ஆம் தேதி வரை தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்க கப்பல்களுக்கான சிறப்பு துறைமுக கட்டணத்தை சீனா தற்காலிமாக நிறுத்தி வைத்துள்ளது.

------------

எல்லையில் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 2 ராணுவ வீரர்கள் காயமடைந்ததை அடுத்து, தாய்லாந்து-கம்போடியா இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தையை நிறுத்துவதாக தாய்லாந்து பிரதமர் அறிவித்துள்ளார்.

------------

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்றிரவு கோவை வந்தடைந்தார்.

------------

தமிழகம்-கேரளா இடையேயான நெய்யாறு பிரச்சினை தொடர்பான வழக்கின் விசாரணையை உச்சநீதிமன்றம் 4 வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

------------

மயிலாடுதுறையில் காவிரி துலா உற்சவத்தை முன்னிட்டு வதான்யேஸ்வரர் கோவிலில் பன்னிரு திருமுறைகளை யானைகள் மீது வைத்து வீதி உலா நடைபெற்றது.

-----------

அறுபடை வீடுகளுக்கு ஆன்மிகப் பயணம் என்ற திட்டத்தின்கீழ் 200 பயணிகளைக் கொண்ட 7வது குழுவினர் திருச்செந்தூரில் இருந்து இன்று புறப்படுகின்றனர்.

------------

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய தேனீர் கடையை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் திறந்து வைத்தார்.

------------

டெல்டா மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த 14 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான குறுவைப் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மாநில வேளாண் துறை தெரிவித்துள்ளது.

------------

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 6 ஆயிரத்து 500 கன அடியாக உள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் இந்தியாவின் Samrat Rana தங்கப் பதக்கத்தையும், வருண் தோமர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

--------------

Kumamoto மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி ஜப்பானில் இன்று தொடங்கியது.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் லக்ஷயா சென், H.S. பிரனாய், ஆயுஷ் ஷெட்டி உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<The End>>>>